1987 ஏப்ரல் 29]

திரு. ஆ. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி சோழவந்தானில் சலவைத்துறை அமைக்க வேண்டுமென்று அங்கே உள்ள சலவைத் தொழிலாளர்கள் பல காலமாக கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொழில் செய்ய ஒரு சரியான இடம் இல்லாத காரணத்தால் அவர்கள் மிகவும் இன்னலுக்கு ஆட்படுத்தப்படுகிறார்கள். எனவே, அதை உத்தேசித்தாவது அரசு அங்கே சலவைத்துறை அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றம் 20 சதவீதமும், பயன் படுத்துவோர் 5 சதவீதமும் கொடுப்பார்களானால், அரசு அதைப்பற்றி பரிசீலிக்கும்.

திரு. ஆ. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் போலவே பாலமேடு, முள்ளிப்பள்ளம் போன்ற என்னுடைய தொகுதியில் உள்ள கிராமங்களில் உள்ள சலவைத் தொழிலாளர்களிடமிருந்து, சலவைத்துறை அமைக்க வேண்டுமென்று கோரிக்கைகள் அரசுக்கு வந்திருக்கிறதா? அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

கம்பம் அரசு மருத்துவமனையில் ஆக்ஸிடெண்ட் வார்டு கட்டுதல்.

543—(*வினா எண் 13807) **திரு. சி. சுப்புராயர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் அரசு மருத்துவமனையில் ஆக்ஸிடெண்ட் வார்டு ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) தேவைகள், திட்டங்களின் முன்னுரிமை மற்றும் அரசின் நிதிநிலை ஆகியவைகளின் அடிப்படையில் செயற் குறிப்புகள் பரிசிலிக்கப்படும். ம

திரு. சி. சுப்புராயர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் ஏலக்காய் வாரியம், கம்பம் மருத்துவமனையில் ஒரு ஆக்சிடெண்ட் வார்டு கட்டுவதற்கு ரூ. 3 இலட்சம் தருவதற்குத் தயாராக உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஆக்சிடெண்ட் வார்டு கட்டித்தருவது பரிசீலனையில் உள்ளதாகச் சொன்னார்கள். அதற்காக தொகுதி மக்கள் சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த ஆக்சிடெண்ட் வார்டு கட்டுவதற்கு எப்போது பணி துவங்கும்? எவ்வளவு நாளில் கட்டி முடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் குடும்பநலத்துறை இயக்குநரிடமிருந்து இதற்கான செயற்குறிப்பு பெறப்பட்டவுடன், முன்னுரிமை அடிப்படையில் இதற்கான பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு அனுமதிக்கப்படும். ரூ. 5 இலட்சம் கட்டிடத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. சுப்புராயர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் அரசாங்க மருத்துவமனையில் தண்ணீர் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. மேலும் கம்பத்தைச் சுற்றி ஏராளமான கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களில் உள்ளவர்கள் அவ்வளவுபேரும் இந்த மருத்துவ மனையில்தான் மருத்துவ வசதி பெறுகிறார்கள். எனவே, அந்த மருத்துவ மனையை விரிவாக்குவதற்கும், கூடுதலாகக் கட்டிடங்களைக் கட்டுவதற்கும், தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர்ப் பற்றாக்குறை பற்றி உடனடியாக கவனிக்கப்படும். விரிவாக்கத்தைப்பற்றி அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

சென்னையில் புதிய பால் பண்ணை.

549—(*வினா எண் 2567) **திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மேலும் புதிதாக பால் பண்ணைகள் தொடங்கப்படுமா ?

(ஆ) தற்போது எத்தனை பால் பண்ணைகள் உள்ளன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். சென்னையில் மேலும் புதிதாக ஒரு பால் பண்ணை துவங்கப்படவிருக்கிறது.

(ஆ) சென்னையில் உள்ளது இரண்டு.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் புதிதாக துவங்கப்படவிருக்கும் பால் பண்ணை எவ்வளவு ரூபாய் செலவில், எப்போது துவக்கப்படும்? தமிழ்நாட்டில் பால் பண்ணைகள் அதிகமாகிக் கொண்டிருக்கிற நிலைமையில் நாட்டில் பால் உற்பத்தி பெருகி இருக்கிறதா? நலிந்த மக்களுக்கு வெளி மாநிலங்களிலிருந்து பால் இறக்குமதி செய்து, குறைந்த விலையில் அரசு பால் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னையில் நாளொன்றுக்கு 4.50 லட்சம் லிட்டர் பால் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. வட சென்னையில் சைதை தாலுக்காவில் ஒரு புதிய பால் பண்ணை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் அளவு 2 லட்சம் லிட்டராகும். தற்போது அம்பத்தூர் மற்றும் மாதவரத்தில் உள்ள பால் பண்ணைகளில் மேலும் ஒரு லட்சம் லிட்டர் பால் பதப்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது.